

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நல்வழிகாட்டுதலின்படி, இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சரும், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு நேற்று (12.07.2025) வி.க.நகர் மண்டலம், வார்டு74, சந்திரயோகி சமாதி சாலையில் ரூ.32.90 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட பல்நோக்கு மையக் கட்டடத்தினைப் பயன்பாட்டிற்குத் திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில், மேயர் திருமதி ஆர்.பிரியா, மத்திய வட்டார துணை ஆணையர் எச்.ஆர்.கௌஷிக், மண்டலக்குழுத் தலைவர் திருமதி சரிதா மகேஷ்குமார் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் முன்னெடுப்பில் ‘ஓரணியில் தமிழ்நாடு’ புதிய உறுப்பினர்கள் சேர்க்கை முகாம் திருவள்ளூர் மேற்கு ஒன்றியம் திமுக சார்பில் காக்களூர் TNHB குடியிருப்பு பகுதியில் ஒன்றிய கழகச் செயலாளர் ஆர்.ஜெயசீலன் தலைமையில் உறுப்பினர் சேர்க்கை நடைபெற்றது இதில் மாவட்ட கழக செயலாளர் அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் வீடு வீடாக சென்று, கழக ஆட்சியின் சிறப்பு திட்டங்களை எடுத்துக் கூறி உறுப்பினர் சேர்க்கை பணியில் ஈடுபட்டார்கள் அருகில் ஆ.கிருஷ்ணசாமி எம்.எல்.ஏ, தொகுதி பார்வையாளர் பி.டி.சி.செல்வராஜ், கே. ஜெ.ரமேஷ், மா.இராஜ், த.எத்திராஜ், பார்வையாளர் டி.குமரேசன், உள்பட கழக நிர்வாகிகள் கலாந்து கொணட்னர்.

## திருச்சி தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில்

# துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலினுக்கு சிறப்பான வரவேற்பு!

### மாவட்டச் செயலாளர் - அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி அறிக்கை !



திருச்சி, ஜூலை 13-

திருச்சி மாவட்டத்திற்கு வருகை தரும் கழக இளைஞர் அணி செயலாளர், தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்கள் இன்று (13.07.2025 - ஞாயிற்றுக்கிழமை) இரவு 7.30 மணியளவில் சென்னையில் இருந்து விமானம் மூலம் திருச்சி வருகை தந்து தெற்கு மாவட்டத்தில் நடைபெறும் பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ள வருகை தர உள்ளார்கள். அவரை தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் திருச்சி விமான நிலையத்தில் வரவேற்க உள்ளோம்.

இந்த நிகழ்வில் மாநில, மாவட்ட, மாநகர கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், பகுதி, ஒன்றிய, நகர, பேரூர், வட்ட, வார்டு, கிளை கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், மாமன்ற உறுப்பினர்கள், அனைத்து அணிகளைச் சேர்ந்த அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள் தவறாது கலந்துகொண்டு சிறப்பிக்குமாறு கேட்டு கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தமது அறிக்கையில் கூறியுள்ளார்.

## இ.கருணாநிதி- – எஸ்.ஆர்.ராஜா –– மேயர் க.வசந்த குமாரி- – கோ. காமராஜ் – - த.ஜெயகுமார் – வே.கருணாநிதி பங்கேற்பு!

# பம்மல் வடக்குப் பகுதி தி.மு.க. இளைஞரணி சார்பில் பொதுக்கூட்டம்!

### அமைச்சர் தா.மோ.அன்பரசன் சிறப்புரையாற்றினார்! ஞா.பிரபு தலைமை!

காஞ்சிபுரம், ஜூலை 13-

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம், தாம்பரம் மாநகரம், பம்மல் வடக்குப் பகுதி தி.மு.க. இளைஞரணி சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 102வது பிறந்த நாள் விழா மற்றும் திராவிட மாடல் அரசின் நான்காண்டு சாதனை விளக்க பொதுக்கூட்டம் நேற்று (12.07.2025 சனிக்கிழமை) மாலை 4.00 மணியளவில் குளக்கரைத்தெரு, அனகாபுத்தூரில் நடைபெற்றது.

இக்கூட்டத்திற்கு பம்மல் வடக்கு பகுதி இளைஞரணி அமைப்பாளர் ஞா.பிரபு தலைமை வகித்தார்.

தாம்பரம் மாநகர இளைஞரணி துணை அமைப்பாளர்ச.பிரபு, அனகாபுத்தூர் மாணவரணி அமைப்பாளர் ஆ.செந்தில்குமார் ஆகியோர் வரவேற்புரையாற்றினர்.

எஸ்.சுரேஷ், ஜெ.கார்த்திக், மோ.சரவணன், ஆர்.யுவராஜ், எஸ்.எச்.அருள்பிரான்சிஸ், ஆர்.யுவராஜ், பா. கார்த்திக், ஸ்டாலின், ஆர். பி.புவனேஷ்வர், ஜெ.சாந்தகுமார், சி.பி.வினோத்குமார், எஸ்.அருண்பாண்டி, டி.எம். புருஷோத்தமன், எம்.பிரதீப், எஸ்.ராஜேஷ்குமார், எஸ். சிவமணிகண்டன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இக்கூட்டத்தில் காஞ்சிபுரம் வடக்கு மாவட்டச் செயலாளர் குறுசிறு நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன், கழக சொற் பொழிவாளர்கள் மௌலிவாக்கம் தங்கம், மா.பூபதி ஆகியோர் சிறப்புரை யாற்றினர்.

இதில் கருணாநிதி எம்.எல்.ஏ., எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ., மேயர் க.வசந்த குமாரி, பிரபு கஜேந்திரன், துணை மேயர் கோ.காமராஜ், வே.கருணாநிதி, லோ. தனவந்தன், திருநீர்மலை த. ஜெய குமார், இரா.நரேஷ் கண்ணா, எஸ்.கே.நெப்போலியன், கோல்டு டி.பிரகாஷ், பி.கே. ஏ.சத்தியபிரபு, கோ. ஜானகிராமன், கே.சந்திரன், மு.ஸ்ரீதர், க.ஜெயசீலன், ஜி. பப்பிதா, சி.பார்த்தசாரதி, இரா.குமரேசன், இரா.பாபுஜி, க.சுந்தரமூர்த்தி, ப.அன்பழகன், க. மோகன், மு.நி.தமிழ்குமரன், ப.ஆண்ட வன், இ.பாலாஜி, டி.எம்.ஜோசப், கலைவாணி பிரபு, வாணிஸ்ரீ விஜயகுமார், சித்ரா தமிழ்குமரன், சண்முக சுந்தரி ஜெயகுமார், சித்ரா தேவி முரளிதரன், ஜெ.இன்சமாம், வீ.கார்த்திக், ச. ராஜேஷ், வே.சிவசுப்பிரமணியன் உள்ளிட்ட கழகத்தினர் பங்கேற்றனர். பி.சரத்குமார் நன்றி கூறினார்.

## முதல்வர்களுக்கெல்லாம் முதல்வராக

# ஆளுமைமிக்க ஆட்சியை நடத்துகிறார் நம் முதல்வர்!

### பொதுக்கூட்டத்தில் முன்னாள் அமைச்சர் வி. செந்தில்பாலாஜி பேச்சு!



கரூர், ஜூலை 13-

கழகத் தலைவர், முதலமைச்சர். மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க, “தமிழ்நாட்டின் மண்-மொழி, மானம், காக்க, ஓரணியில் தமிழ்நாடு” எனும் திமுக உறுப்பினர் சேர்க்க முன்னெடுப்பு மாபெரும் பிரச்சார பொதுக்கூட்டம் கரூர் உழவர் சந்தை அருகில் நடைபெற்றது. மாவட்ட கழக அவை தலைவர் டி . ராஜேந்திரன் தலைமை வகித்தார். மாநகரச் செயலாளர் எஸ்பி.கனகராஜ் வரவேற்புரையாற்றினார்.

கரூர் மாவட்ட கழக செயலாளர் வி.செந்தில் பாலாஜி சிறப்புரை யாற்றினார் அவர் பேசியதாவது:-

பிஜேபி அரசு தமிழ்நாட்டிற்கு வளர்ச்சி திட்டங்களைத் தர மறுக்கின்றது. பிரதமர் தமிழ்நாட்டுக்கு வருகின்ற பொழுதெல்லாம் ஆங்கிலத்தில் பேசுகிறார் என்று இங்கு இருக்கக்கூடிய நிர்வாகிகள் கூற, ஆனால் சமூக வலைதளத் தில் மேலே அவர்கள் சொன்ன கருத்துக்களையும், கீழே மோடி இந்தியிலே பேசுவதையும் எடுத்து போட்டு அதற்கு விளக்கம் சொல்ல முடியாமல் தடுமாறிக் கொண்டிருக்கின்றார்கள் . பிரதமராக இருந்தாலும் சரி நிதி அமைச்சராக இருந்தாலும் சரி, இரண்டு வரியில் திருக்குறளை சொல்லிவிட்டு தமிழ் மீது பற்று கொண்டு இருக்கிறோம் என மக்களை ஏமாற்ற நினைக்கின்றார்கள். ஒருபோதும் தமிழ்நாட்டு மக்களை மோடியால் அந்த கட்சியால் ஏமாற்றி விட முடியாது. அப்படி ஒரு சூழல் எந்த காலத்திலும் வரவே வராது. காரணம்

பெரியார், பேரறிஞர் பெருந்தகை அண்ணாவின் சிந்தனைகளை, முத்தமிழ் அறிஞர் கலைஞரின் எண்ணங்களை ஒருசேர வழி நடத்தி திட்டங்களாக மாற்றி தமிழ்நாட்டினுடைய மக்களை வழிநடத்தி செல்லுகின்ற முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள்.

இந்தியாவில் எத்தனை முதலமைச்சர்கள் வேண்டுமானாலும் இருக்கலாம். ஆனால் அந்த முதல்வர்களுக்கு எல்லாம் முதல்வராக நெஞ்சுரத்தோடு ஒரு ஆளுமை மிக்க ஆட்சியை நடத்துகின்ற முதலமைச்சராக நம்முடைய முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இந்தியாவிற்கு வழிகாட்டிக் கொண்டிருக்கின்றார்கள்.

பிஜேபி ஆளக்கூடிய மாநிலங்களில் வேண்டுமென்றால் கட்டாயத்தை ஏற்படுத்துகின்றனர். எதுவுமே செய்யாமல் கரூருக்கு எந்த வளர்ச்சி திட்டங்களை யும் கேட்டு பெற்று செய்ய முடியாத திராணியில்லாத ஒருவர் ஏதோ திட்டங்கள் எல்லாம் அவர்களால் வந்ததைப் போல ஒரு மாயத் தோற்றத்தை உருவாக்க முயற்சிக்கின்றார்கள்.

ரூ. 40 கோடியில் கரூருக்கு புதிய பேருந்து நிலையத்திற்கான நிதிகளை கொடுத்து துணை முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டுள்ளது. ஆனால் நீதி மன்றத்திற்கு சென்று தடையாணை பெற்றது இவர்கள்தான். அங்கே வாதாடி தடைகளை உடைத்து பேருந்து நிலையம் வந்துள்ளது. நம்முடைய திருவள்ளுவர் விளையாட்டு மைதானம் ராஜலிங்கம் மன்றம் வெறும் செட்டு ஆக இருந்த அந்த இடத்தில் ஏழு கோடி ரூபாய் நிதி ஒதுக்கி போட்டித் தேர்வுக்கு தயாராகும் மாணவர்களுக்கு புதிய நூலக கட்டடம் கட்ட முயன்றால் அதற்கும் தடை வாங்கினார்கள். சட்டப் போராட்டம் நடத்தி வென்று இப்போது பணிகள் நடைபெற்று வருகிறது. இவர்களாக எதுவும் செய்ய மாட்டார்கள். செய்பவர்களையும் செய்ய விட மாட்டார்கள்.

கரூர் காமராஜ் மார்க்கெட் புதிதாக அமைக்க வேண்டும் என்பது 30 ஆண்டு கால கனவு. அதையும் நிறைவேற்றி துணை முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்துள்ளார்கள் மாவட்ட ஆட்சியர் வளாகத்தில் அறிவியல் பூங்கா பழைய மாவட்ட காவல் அலுவலகம் எதிரே உழைக்கின்ற மகளிர் தங்குவதற்கு குறைந்த கட்டணத்தில் மகளிர் தோழி விடுதிகரூர், திருச்சி மாவட்டத்திற்கு மக்கள் எளிதில் சென்று வர நெரூர் பகுதியில் காவிரி ஆற்றில் புதிய பாலம் இவைகள் அனைத்தும் கோரிக்கையாகவே இருந்தவை. கழக ஆட்சியில் தான் நிறைவேற்றப்படுகின்றன. ஏற்கனவே இருந்தவர்கள் மேடையிலேயே பேசுவார்களே தவிர யாராலும் நிறைவேற்ற முடியவில்லை.

கரூர் கோவை 4வழிச் சாலை என்று கூறி நாடாளு மன்றத் தேர்தல் வரும் போதெல்லாம் புகைப் படங்களை மட்டுமே வெளியிட்டார்கள். லென்ஸ்களை வைத்து போட்டோ எடுத்து பத்திரிகைகள் எல்லாம் வெளியிட செய்தனர். ஒரு வேலையும் செய்யவில்லை. ஆனால்

கழக ஆட்சியில் ஏறத்தாழ 134 கோடி ரூபாய் கொடுத்து கரூர் கோவை நான்கு வழி சாலையாக மாற்றி இப்ப நம்ம கோயம்புத்தூர் போனா எளிதில் போகலாம் என்ற அளவுக்கு பணிகள் நடைபெற்று வருகின்றன.

ரூ. 40 கோடியில் குளித்தலையில் அரசு மாவட்ட தலைமை மருத்துவமனை கட்டிடம் கூடுதலாக ரூ.10 கோடி நிதி வழங்கப்பட்டு இருக்கிறது. தரகம்பட்டியில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிக்கு புதிய கட்டிடம்திறப்பு இணைக்கப் பட்ட சணப்பிரட்டி பகுதிக்கு கூடுதல் புதிய குடிநீர் திட்டம்பாதாள சாக்கடை பணிகள் என கரூர் மாநகராட்சிக்கு மட்டும் ரூ.328 கோடியில் கட்டமைப்பு பணிகள் அரவக்குறிச்சியில் புதிய அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிஅரவக்குறிச்சியில் முருங்கை உற்பத்தி பூங்கா கிருஷ்ணராயபுரத்தில் வேலை வாய்ப்பை உருவாக்கும் வகையில் சிப்காட்கரூரில் புதிய ஐடி பார்க் அமைக்க இடம் தேர்வு இப்படி திட்டங்களை சொல்லிக் கண்டே போகலாம். இவற்றையெல்லாம் மக்களிடம் எடுத்துச் சென்று உறுப்பினர் சேர்க்கை பணிகளை மேற்கொள்ள வேண்டும்.

இவ்வாறு அவர் பேசினார்.

தலைமை கழக பேச்சாளர் ஆரூர் மணிவண்ணன், எம் எல்ஏக்கள் பிஆர்.இளங்கோ, க.சிவகமசுந்தரி, இரா. மாணிக்கம், மாநில நிர்வாகிகள் நன்னியூர் ராஜேந்திரன், என்.மணிராஜ், பரணி கே. மணி, கரூர் முரளி, முனவர் ஜான், வே.பல்லவி ராஜா, பி.விஜயகுமார், மேயர் கவிதா கணேசன், துணை மேயர் தாரணி சரவணன், கரூர் மாவட்ட கழக துணைச் செயலாளர்கள் எம்எஸ்கே கருணாநிதி, பூவை ரமேஷ் பாபு, மகேஸ்வரி சுப்பிரமணி, பொருளாளர் பாரத், செயற்குழு உறுப்பினர்கள் சுப. ராஜகோபால், குளித்தலை சிவராமன், காலனி செந்தில், ஆண்டாள் பாலகுருபரன், எம். துரைராஜ், சாலை சுப்பிரமணி, என். செல்வராஜ், பகுதி கழக செயலாளர்கள் கரூர் கணேசன், க. சுப்பிரமணியன், கோல்ட் ஸ்பாட் ஆர்எஸ்.ராஜா, ஆர். ஜோதிபாசு, விஜிஎஸ்.குமார், ஒன்றிய கழகச் செயலாளர்கள் இ.ராமர், எம்எஸ்.மணியன், கே. கருணாநிதி மற்றும் பலர் கலந்து கொண்டனர்.



பெரம்பூர் தொகுதி 46 வது வட்டம் டி.டி.பிளாக் குடியிருப்பில் விளையாடிக் கொண்டிருந்த சிறுவன் கோகுல் (தாயார் பெயர் சிவகாமி) தலையில் அடிபட்டு ஸ்டான்லி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு அவசர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வருகிறார் மாவட்டப் பொறுப்பாளர் ஆர் .டி .சேகர் எம்.எல்.ஏ. மருத்துவ மனைக்குச் சென்று அச்சிறுவனைப் பார்த்து நலம் விசாரித்தார் .



# தி.மு.க. இளைஞர் அணி

**மாண்புமிகு துணை முதலமைச்சரும், கழக இளைஞர் அணிச் செயலாளருமான திரு.உதயநிதி ஸ்டாலின் அவர்களின் சுற்றுப்பயண அறிவிப்பு**

மாண்புமிகு துணை முதலமைச்சரும், கழக இளைஞர் அணிச் செயலாளருமான திரு.உதயநிதி ஸ்டாலின் அவர்கள் அரசு மற்றும் கழக நிகழ்ச்சிகளில் பங்கேற்க, திருவண்ணாமலை மற்றும் திருச்சி மாவட்டங்களுக்கு 2 நாள்கள் சுற்றுப்பயணம் மேற்கொள்கிறார். அங்கு அவர் கலந்துகொள்ளும் நிகழ்ச்சிகளின் விவரம் வருமாறு:

**13.07.2025 ஞாயிற்றுக்கிழமை**

| நேரம் | நிகழ்ச்சி | இடம் |
|---|---|---|
| காலை 09.30 மணி | மாண்புமிகு அமைச்சர் எ.வ.வேலு அவர்களின் இல்லத் திருமண விழா | மாதவி பன்னீர்செல்வம் திருமண மஹால், டி.எஸ்.ஆர். நகர், திருவண்ணாமலை. |
| காலை 10.15 மணி | நகரப் பேருந்து புதிய வழித்தடத்தைத் தொடங்கி வைத்தல். | தென்மாத்தூர், திருவண்ணாமலை. |
| காலை 10.30 மணி | மகளிர் சுயஉதவிக் குழுவினருடன் கலந்துரையாடல். | சு.ஆண்டாப்பட்டு, திருவண்ணாமலை. |
| காலை 11.15 மணி | 41 சட்டமன்றத் தொகுதிகளைச் சேர்ந்த பாக முகவர்கள் பயிற்சிக் கூட்டம். | கலைஞர் திடல், திருவண்ணாமலை. |
| மாலை 04.00 மணி | கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்ட இளைஞர் அணி நிர்வாகிகளுக்கு மோட்டார் சைக்கிள் வழங்குதல். | அருணை கல்லூரி ஆடிட்டோரியம், திருவண்ணாமலை. |
| மாலை 04.30 மணி | மாநகராட்சியாக தரம் உயர்த்தப்பட்ட திருவண்ணாமலை மாநகர மேயருக்கு அங்கி அணிவிக்கும் நிகழ்ச்சி. | மாநகராட்சி அலுவலகம், திருவண்ணாமலை. |
| மாலை 05.00 மணி | சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள் நிதியில் கட்டப்பட்ட கலைஞர் நூற்றாண்டு பன்னோக்கு அரங்கம் திறப்பு விழா. | பழைய அரசு மருத்துவமனை எதிரில், தண்டராம்பட்டு சாலை, திருவண்ணாமலை. |
| மாலை 06.30 மணி | முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் சிலை திறப்பு விழா. | செங்கம், திருவண்ணாமலை. |

**14.07.2025 திங்கள்கிழமை**

| நேரம் | நிகழ்ச்சி | இடம் |
|---|---|---|
| காலை 10.00 மணி | கே.என்.சேகரன் அவர்களின் இல்லத் திருமண விழா. | சிங்கார மஹால், பாலாஜி நகர், காட்டூர், திருச்சி. |
| காலை 11.00 மணி | ஒருங்கிணைந்த திருச்சி மாவட்டத்தில் புதிதாக நியமிக்கப்பட்ட இளைஞர் அணியின் ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம். | கலைஞர் அறிவாலயம், திருச்சி. |

“அன்பகம்”
தேனாம்பேட்டை
சென்னை–18

நாள் : 12.07.2025

கலைஞர் 100 1924 - 2023

